Registered as a Newspaper

**TOEFL CLASSES**
by
S. B. IYAR
சனி / ஞாயிறு
1 - 30 — 2 - 30
12, வைமன் வீதி,
நல்லூர்.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை:
ரூ. 1-25

**Spoken English**
by
S. B. IYAR
தூர இடங்களிலிருந்து வருபவருக்கு.
ஆரம்பம்: 02 - 03 - 1987
நேரம்: 10-30 — 11-30
12, வைமன் வீதி,
நல்லூர்.

சுடர்: 2 யாழ்ப்பாணம் அக்ஷய வருடம் மாசி மீ 12 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1407 ஜமா ஆகிர் பிறை 25 (24-02-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY ஒளி 76

# ஓமந்தையில் கண்ணிவெடி சிப்பாய்கள் பலி!

## பின்னர் படைகளுடன் புலிகள் நேரடி மோதல்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 24

ஓமந்தை இராணுவ முகாமுக்குச் சற்றுத் தொலைவில் வைக்கப்பட்டிருந்த நிலக்கண்ணி வெடியில் இராணுவ ஜீப் ஒன்று சிக்குண்டது. அதில் பயணம் செய்த ஆறு சிப்பாய்கள் கொலையுண்டனர். ஒருவர் காயம் அடைந்தார். ஜீப்பும் தூக்கி வீசப்பட்டு சுக்கு நூறாகியது. இச்சம்பவம் நேற்றுக்காலை இடம் பெற்றது.

சம்பவம்பற்றித் தெரிய வருவதாவது:

நேற்றுப் பகல் சுமார் பதினொரு மணியளவில் ஓமந்தை இராணுவமுகாமில் இருந்து வவுனியாப் பக்கமாக சிப்பாய்கள் ஜீப் ஒன்றில் ரோந்து சென்றுகொண்டிருந்தனர்.

முகாமில் இருந்து குறுகிய தூரத்தில் ஜீப் சென்றுகொண்டிருந்த பொழுது பெரும் வெடிச் சத்தத்துடன் சிப்பாய்கள் பயணம் செய்த ஜீப் தூக்கி எறியப்பட்டது. அதன் காரணமாக ஆறு சிப்பாய்கள் அந்த இடத்திலேயே கொலையுண்டனர்.

ஜீப்பில் பயணம்செய்தவர்களில் கொல்லப்பட்டவர்களைத் தவிர காயங்களுடன் தப்பிய ஒரு சிப்பாய் காடுகளுக்குள்ளால் தப்பிவந்து போக்குவரத்துச்சபை பஸ் ஒன்றில் ஏறி முகாம் வந்து சேர்ந்தார்

இவருக்குக் காலில் மட்டும் காயம் ஏற்பட்டுள்ளதாக அறியப்பட்டது

இக்கண்ணிவெடித்தாக்குதலைப் புலிகளே நடத்தியதாக அறிய வருகி
(4 ஆம் பக்கம் பார்க்க)

### "எங்களில் பலர் இறந்துவிட்டனர்; உங்களையும் சுடப்போகிறோம்"

யாழ்ப்பாணம், பெப். 24

எங்களில் பலர் இறந்து விட்டனர். உங்களையும் சுடப்போகிறோம்

நேற்று ஓமந்தையில் தரித்து நின்ற பஸ் ஒன்றினுள் ஏறிய சிப்பாய்கள் இவ்வாறு தெரிவித்தனர் என்று பயணி ஒருவர் உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

சம்பவம் பற்றி அவர் தெரிவித்ததாவது:- எமது பஸ் ஓமந்தை முகாமை அண்மித்துக்கொண்டிருந்த பொழுது பெரும் குண்டு வெடிச் சத்தம் ஒன்று கேட்டது.

எனினும் பஸ் சாரதி தொடர்ந்து பஸ்ஸை செலுத்திச் சென்றார். பஸ் ஓமந்தை முகாமில் நிறுத்தப்பட்டது.

அப்பொழுது ஹெலிக்கொப்டரும், குண்டு வீச்சு விமானமும் மேலே பறந்து கொண்டிருந்தன.

துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும் கேட்டபடி இருந்தன. பஸ்ஸினுள் ஏறிய சிப்பாய்கள் "எங்களில் பலர் இறந்துவிட்டார்கள்; உங்களையும் சுடப்போகிறோம்" என்றனர்.

பயணிகளும் அமைதியாக இருந்தனர்.

இதனை அடுத்து எமது வாகனத்துக்குப் பின்னால் வேறு இரண்டு வாகனங்கள் வந்தன. சிப்பாய்கள் இறங்கிச் சென்றுவிட்டனர்.

இப்படி அவர் சொன்னார். (இ-10)

### ஓமந்தையில் தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப் 24

ஓமந்தைப் பகுதியில் நேற்று குண்டு வீச்சு விமானமும், ஹெலிக்கொப்டரும் தாக்குதல் நடத்தின.

நேற்றுப் பகல் 12 மணி அளவில் இச் சம்பவம் நடைபெற்றதாகத் தெரியவருகிறது

ஓமந்தை இராணுவ முகாம் பக்கமாக நேற்று நடைபெற்ற புலிகள் படைகள் நேரடி மோதலையடுத்தே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டன. (இ-10)

முச்சந்தி முனி



இலங்கை ஜனாதிபதியின் பார்லிமெண்ட் பிரசங்கத்தை இந்திய ஜனாதிபதி தன்னுரை பிரசங்கத்தில் கண்டிச்சிருக்கிறார் பார்க்கயில்லையே!

### பதற்றம்

பலாலி, பெப் 24

நேற்று தொண்டமானாறுப் பகுதியிலிருந்து இராணுவம் வெளியேறுவதாக அறிந்த போராளிகள் தொண்டமானாறுப் பகுதியை நோக்கி விரைந்தனர்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து இடைக்காடு, அச்சுவேலி, பத்தமேனிப்பகுதி மக்கள் சில மணி நேரம் அல்லோல கல்லோலப்பட்டனர்
(இ-119)

## அரச அலுவலகங்கள் நேற்றுச் செயலிழந்தன

### அடகு வைத்தோர் மறியல்

யாழ்ப்பாணம், பெப். 24

யாழ் செயலகம் உட்பட பல அரச அலுவலகங்கள் முன்பாக அடகு வைத்தோர் சங்கத்தினர் நேற்று மறியல்போராட்டம் நடத்தினர்.

இதன் காரணமாக யாழ் செயலகம், வீடமைப்பு அதிகாரசபை, இறைவரித் திணைக்களம் என்பன நேற்றுச் செயலிழந்தன

அடகுவைத்தோர் சங்கம் நடத்திய மறியல் போராட்டம் காரணமாக அலுவலக ஊழியர்கள் தெருவோரங்களில் காத்து நின்றனர்.

காலையில் அரச அதிபர் வருவாரென எதிர்பார்க்கப்பட்டபோதிலும் அவர் வராததன் காரணமாக நண்பகல்வரை மறியல் போராட்டம் நீடித்தது. அலுவலக வாசல்களில் சுலோக அட்டைகளும் தொங்க விடப்பட்டிருந்தன.

மீண்டும் இன்று மறியல் தொடர்ந்து நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மறியல் போராட்டத்தில் கலந்துகொள்பவர்களுக்கு இலவச வாகன சேவையும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது (இ-10)

### ● நாளை முதல் கிளிநொச்சி வரை ரயில்

கொழும்பு, பெப் 24

வடபகுதி ரயில் சேவை நாளை புதன் முதல் கிளிநொச்சி வரை விஸ்தரிக்கப்படவுள்ளது

இதற்கான பணிப்புரையை போக்குவரத்து அமைச்சர் நேற்று ரயில்வே திணைக்களத்துக்கு விடுத்தார்.

காலை 5 30 மணிக்கு கொழும்பு கோட்டையில் இருந்து யாழ்தேவி ரயில் புறப்பட்டு பிற்பகல் 12 45 மணிக்கு கிளிநொச்சியை அடையும்.

அன்று பிற்பகல் 1 15 க்கு கிளிநொச்சியில் இருந்து புறப்படும் யாழ்தேவி ரயில் கொழும்புக் கோட்டையை இரவு 9 00 மணிக்கு வந்தடையும்.
(இ-எ)

## மூதூரில் 105 தமிழர் படையினரால் கைது!

மூதூர், பெப். 24

கடந்தவாரம் மூன்று தினங்களில் மட்டும் மூதூர்த் தொகுதியில் 105 தமிழர்கள் ஆயுத படையினரால் கைது செய்யப்பட்டனர்.

மூதூர்த் தொகுதியில் உள்ள பட்டித்திடல், மணல்சேனை, மல்லிகைத்தீவு, பள்ளிக்குடியிருப்பு, மேன்காமம், பெரியவெளி, கடற்கரைச் சேனை, கட்டைபறிச்சான், 58 ஆம் கட்டை, கூனித்தீவு, இத்திக்குளம், சம்பூர், ஆலிம்சேனை ஆகிய கிராமங்களில் வசித்து வந்தவர்களே இப்படிக் கைது செய்யப்பட்டனர்.

இம்மாதம் 16 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை நடத்தப்பட்ட தேடுதலின் போது இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

15—19 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் 16 பேர் இவர்களுள் அடங்குகின்றனர்.

கோயில் ஐயர், ஆசிரியர் ஆகியோரும் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஏனையோர் 20—50 வயதுக்கு இடைப்பட்டவர்கள். (இ-எ)

### மக்கள் வங்கி முகாமையாளர் தொடர்பு

யாழ்ப்பாணம், பெப். 24

அடகு நகைகள் சம்பந்தமாக கொழும்பில் உள்ள மக்கள் வங்கி நிர்வாகத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொள்வதற்காக வட பிராந்திய மக்கள் வங்கி முகாமையாளர் இன்று வவுனியா செல்லலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

வங்கி நிர்வாகத்துடனும், பாதுகாப்பு அமைச்சுடனும் உடனடியாக தொடர்பு கொள்ளும்படி யாழ் அரச அதிபர் வங்கியின் பிராந்திய முகாமையாளரைக் கேட்டுக்கொண்டதை அடுத்தே அவர் இன்று வவுனியாவுக்கு செல்லலாம் எனவும் தெரியவருகிறது.

இதேவேளை தமது விசேஷ தொலைபேசியும் பழுதடைந்து விட்டதாக யாழ் அரச அதிபர் தெரிவித்தார். (இ-10)

### கைதடியில் பனையை முறித்த ஷெல்

கைதடி, பெப். 24

நேற்றுக் காலை 6மணி அளவில் நாவற்குழி இராணுவ முகாமில் இருந்து ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஒரு ஷெல் கைதடிச் சந்தியில் கண்டி வீதிப் பக்கம் பனை ஒன்றின் மீது விழுந்து வெடித்து பனை முறிந்தது

நேற்று முன் தினம் அதாவது ஞாயிற்றுக்கிழமை நிகழ்ந்த ஷெல் தாக்குதல்களின் போது கைதடிச்சந்தியில் கோப்பாய் றோட்டுப்பக்கமாக மின்சார வயர்கள் அறுந்து விழுந்தன. இதனால் அப்பகுதி முழுவதும் இருளில் மூழ்கியது. (இ-74)

## உறுதி மொழியிலிருந்து இலங்கை பின்வாங்கியது துரதிஷ்டவசமானது

### நாடாளுமன்றத்தில் ஷெயில்சிங் உரை

புதுடில்லி, பெப். 24

டிசம்பர் 19 யோசனைகள் சம்பந்தமான உறுதி மொழியில் இருந்து இலங்கை அரசு பின்வாங்கியது துரதிஷ்டமானது.

இந்திய நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடர் நேற்று ஆரம்பமானது

ஜனாதிபதி ஷெயில்சிங் அங்குரார்ப்பண உரையை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கை இனப்பிரச்சினை பற்றி ஜனாதிபதி ஷெயில்சிங் சொன்னதாவது;

இனப் பிரச்சினைத் தீர்வு குறித்து இந்தியப் பிரதமர் இலங்கை ஜனாதிபதி ஆகியோர் பெங்களூரில் பேச்சுக்கள் நடத்தினர்.

பின்னர் டிசம்பரில் கொழும்பில் உயர்மட்டப் பேச்சுக்கள் நடந்தன இதைத் தொடர்ந்து டிசம்பர் 19இல் யோசனைகள் உருவாக்கப்பட்டன. ஒப்புக்கொள்ளப்பட்ட அந்த யோசனைகள் சம்பந்தமான உறுதி மொழியில் இருந்து இலங்கை அரசு பின்வாங்கியுள்ளது. உறுதி மொழியை நிறைவேற்ற அது தயக்கம் காட்டுகிறது.

இது பெரும் துரதிஷ்டமானதாகும். இலங்கை அரசின் இத்தயக்கத்தினால் தீர்வு காணுவதில் சுணக்கம் ஏற்பட்டுள்ளது.

#### இராணுவ பொருளாதார நெருக்குதல்கள்

தமிழர் பகுதிகளில் இலங்கை இராணுவம் பலத்த தாக்குதலை மேற்கொண்டு வருகிறது

யாழ் குடா நாடு மீது பொருளாதார முற்று கையை விதித்துள்ளது.

இந்த நிலைமையினால் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு செல்லவதில் பெரும் இடைஞ்சல் ஏற்பட்டு உள்ளது.

இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கையி
(4ஆம் பக்கம்பார்க்க)

## என்முழு அனுதாபமும் இலங்கைத் தமிழர் மீதே என்கிறார் ராஜீவ்

புதுடில்லி, பெப். 23

எனது முழு அனுதாபமும் இலங்கைத் தமிழர் மீதே உண்டு.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்திரா காங்கிரஸ் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் திரு காந்தி கடந்த ஞாயிற்றுக் கிழமை பேசினார்.

அப்போது இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து திரு. காந்தி கருத்து வெளியிட்டார்.

இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கை நீடிக்கும் வரை இனப்பிரச்சினைப் பேச்சுக்களை நடத்தும் சாத்தியமே இல்லை.

இராணுவ நடவடிக்கை, இனப்படுகொலை ஆகியன இனப் பிரச்சினைக்குத் தீர்வாக மாட்டா.

எனது முழு அனுதாபமும் இலங்கைத் தமிழர் மீது உண்டு.

தான் கூறிய யோசனைகளில் இருந்து தானே பின்வாங்கிவிட்டார் ஜனாதிபதி ஜெயவர்த்தன. இது வருத்தத்துக்கு உரியது.

இப்படித் திரு. ராஜீவ் காந்தி தெரிவித்தார். (இ-எ)

### சுபநேரம்

24 - 02 - 1987

செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:
11-00 முதல் 12-30 வரை
ராகுகாலம்:
3-30 முதல் 5-00 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

### கொழும்பு மட்டக்களப்பு இரவு தபால் சேவை

கொழும்பு, பெப். 24,

கொழும்பு - மட்டக்களப்பு இரவு தபால் சேவை நாளை புதன் கிழமை ஆரம்பமாகும் என்று அரச அறிவித்துள்ளது.

கொழும்புக் கோட்டையில் இருந்து மாலை 5.50க்குப் புறப்படும் தபால் ரயில் அடுத்த நாள் காலை 7 25க்கு மட்டக்களப்பு சென்றடையும்.

மட்டக்களப்பில் இருந்து மாலை 5 மணிக்கு புறப்படும் ரயில் கொழும்புக் கோட்டையை மறுநாள் அதிகாலை 3 40க்குச் சென்றடையும்.

கல்லோயாவில் இருந்து திருமலைக்கு இரவு இணைப்புச் சேவையும் நடத்தப்படும். (இ-எ)

### எம். ஜி. ஆரை கூட்டணியினர் சந்தித்தனர்

சென்னை, பெப். 23

தமிழரைப் படுகொலையில் இருந்து காப்பாற்ற செல்வாக்கைப் பயன்படுத்தும்படி கூட்டணித் தலைவர்கள் தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. இராமச்சந்திரனை நேரில் கண்டு வற்புறுத்தினர்.

இச்சந்திப்பு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம், பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் ஆகியோரே முதலமைச்சரைச் சந்தித்தனர்.

(இ-எ)

### குடும்பத்தவரில் 8 பேர் கொலையுண்ட பின்

## புலிகள் தளபதி றேகனை பிடிக்க படையினர் தீட்டிய திட்டம்!

மட்டக்களப்பு பெப். 24

மட்டக்களப்புவெல்லாவெளி விடுதலைப் புலிகள் தளபதி றேகன் தமது குடும்ப உறுப்பினர்களின் மரணச்சடங்கில் கலந்துகொள்வருவார் என்ற ஆயுதபடையினரின்எதிர்பார்ப்பு பலனளிக்கவில்லையாம்.

றேகனின் வருகையை எதிர்பார்த்து படையினரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

படையினர் அவதானமாகவும் விழிப்புடனும் காணப்பட்டனர்.

எனினும் அவர்களின் எண்ணம் கைகூடவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

றேகனின் தாய் சகோதர சகோதரிகள், மனைவி பிள்ளைகள் உட்பட 8 பேர் இம்மாதம் இரண்டாம் வாரத்தில் கோரமாகக் கொலை செய்யப்பட்டிருந்தனர்.

சம்பவ தினம் இரவு 7 மணி அளவில் முதலில் றேகனின் தாய் வீடு சென்று தாயையும்சகோதரியையும் வெட்டிக் கொன்ற ஒரு கோஷ்டியினர் பின்பு றேகனின் சகோதரன் வீடு சென்றனர்.

பெயர்ப்பட்டியலை கொச்சைத் தமிழில் வாசித்து அழைத்துசகோதரன் வீட்டில் வசித்த அனைவரையும் அக்கோஷ்டி கொலை செய்தது.

மட்டக்களப்பில் கூட்டுறவு பரிசோதகராக கடமையாற்றும் றேகனின் மூத்த சகோதரன் அந்நேரம் வீட்டிலிருந்த போதிலும் பட்டியலில் பெயர் இல்லாத காரணத்தால் அக்கோஷ்டியினரால் அங்கிருந்து விரட்டி அனுப்பப்பட்டார்.

அவரை அவர்கள்றேக
(4ஆம் பக்கம் பார்க்க)

## வடபகுதி முகாம்களில் கொமாண்டோக்கள் குவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 24

கடந்த சில தினங்களாக சுமார் மூவாயிரம் கொமாண்டோக்கள் (அதிரடிப்படையினர்) வடபகுதி முகாம்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்று தெரிகிறது.

மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களில் அண்மையில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளின்போது இவர்களே கடுதலாக பெரும் அழிவு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்று கூறப்படுகிறது.

இவர்கள் பாகிஸ்தானின் விசேட பயிற்சி பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது

இதனிடையே நேற்றும் ஏராளமான இராணுவத்தினர் மண்டைதீவு, கோட்டை, நாவற்குழி முகாம்களுக்கு வருவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை ஏற்றி இறக்கும் பணியில் இரு ஹெலிக்கொப்டர்கள் நேற்று முழுவதும் ஈடுபடுத்தப்பட்டன.

இராணுவப் பொறியிலாளர்களும், அவசரச் சிகிச்சை வைத்தியர்களும் முகாம்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

மண்டைதீவு இராணுவ முகாமில் ஹெலிக்கொப்டர் மூலம் இறக்கப்பட்ட சிப்பாய்கள் கவச வாகனங்களிலும் டிரக் வண்டிகளிலும் கோட்டை முகாமுக்குச் சென்றனர். (இ-10)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சின்னஞ் சிறு விளம்பரங்கள் ★

**வகுப்புகள்**

Computer Programming றேடியோ, ரீவி திருத்துதல், வயறிங் ஆரம்பம்: 25-2-87 9-30 a. m Able Technical Studies கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.


# மன்னார்ப் பகுதி நோயாளர்கள் இக்கட்டான நிலையில்

## இராணுவ கெடுபிடிகளினால் ஆஸ்பத்திரிகள் ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், பெப் 24

மன்னாரில் இடம்பெற்ற இராணுவ அசம்பாவிதங்களால் வைத்தியசாலைகளுக்கு மக்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

அடம்பன் ஆஸ்பத்திரியை இராணுவத்தினர் தகர்த்துள்ளனர்.

விடத்தல் தீவு ஆஸ்பத்திரியில் இராணுவத்தினர் முகாமிட்டுள்ளனர்.

முருங்கன் வைத்தியசாலைக்கு அண்மையில் இராணுவத்தினர் முகாமிட்டுள்ளதால் நோயாளிகள் அங்கே செல்லத் தயங்குகிறார்கள்.

இதனால் மன்னார் மாவட்ட நோயாளிகள் பெரும் பாதிப்புள்ளாகியுள்ளனர் என்று மன்னார் பிரசைகள் குழுச் செயலாளர் கூறினார். (உ-5)

## இரு பாடசாலைகள் இடம் மாற்றம்

பருத்தித்துறை, பெப். 24

பருத்தித்துறை கலட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலை அண்மையில் இராணுவத்தினரால் ஏவப்பட்ட ஷெல்களின் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் இப் பாடசாலை தும்பளையில் அமைந்துள்ள லூர்த்து மாதா தேவாலய வளவிற்கு தற்காலிகமாக இடம் மாற்றப்பட்டுள்ளது.

இங்குள்ள மடம் மற்றும் அறைகளில் வகுப்பறைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் சில தற்காலிக வகுப்பறைகளை அமைப்பதற்கும் அதிபர் திரு. எஸ். சேவியர் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.

இதே வேளை பருத்தித்துறை சென்தோமஸ் புனித கல்விபரிமடம் பாடசாலை தற்காலிகமாக தும்பளை திவ்யப்பிரகாச மகாவித்தியாலய வளவினுள் நடாத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இப் பாடசாலை இராணுவ முகாமிலிருந்து ஆயிரம் மீற்றருக்குள் அமைந்திருந்தது என்பதும் அடிக்கடி ஏற்படும் இராணுவக் கெடுபிடிகளினால் இப் பாடசாலையைத் தொடர்ந்து நடாத்த முடியாமல் இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-118)

### ஓய்வு பெற்றார்

அச்சுவேலி, பெப். 24

யாழ் மாவட்ட கல்வித் திணைக்கள அலுவலக உதவியாளராக கடமையாற்றிய திரு க. இராசலிங்கம் சேவையில் இருந்து ஓய்வு பெற்றார்.

திரு. க. இராசலிங்கம் பல வருடங்கள் யாழ் மாவட்டக் கல்வித் திணைக்களத்தில் கடமை புரிந்து ஆசிரியர்களின் தேவைகளை அறிந்து நிறைவு செய்தவர் ஆவார். (இ-11)

## தமிழர்களின் கல்வி பாதுகாக்கப்பட வேண்டிய முக்கிய காலகட்டம் இது

### ஸ்கந்தா பரிசளிப்பு விழாவில் உரை

சுன்னாகம், பெப் 24

தமிழ் மாணவர்களின் கல்வித்துறை நாளுக்கு நாள் சீர்குலைந்து வருவதை பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறும் மாணவர்களின் புள்ளி விபரங்கள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

எமது எதிர்கால சந்ததியினரின் கல்விச் செல்வம் எந்த அரசாலும் பாழடிக்க முடியாதபடி பாதுகாப்பதற்கு ஆசிரியரும் கல்விமான்களும் தம்மை தயார் செய்ய வேண்டிய முக்கியமான காலகட்டம் இதுவாகும்.

இப்படி பேராசிரியர் வைத்திய கலாநிதி ரி. கனகேஸ்வரன் குறிப்பிட்டார்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஸ்தாபகர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் அதிபர் திரு பி. நாகரட்ணம் தலைமையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே யாழ் பல்கலைக் கழக மனநோயியல் பிரிவு பேராசிரியர் வைத்திய கலாநிதி ரி. கனகேஸ்வரன் இப்படிக் கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது;

ஒரு சமுதாயம் வளர்ச்சியடைவதற்கு ஆசிரியர்கள் அளப்பரிய பணி புரிய முடியும். ஸ்கந்தவரோதய கல்லூரி யாழ் மாவட்டத்தில் மாத்திரமல்ல இலங்கை முழுவதிலும் புகழ்பெற்ற ஒரு கல்வி ஸ்தாபனமாக விளங்குகிறது என்றார்.

ஸ்தாபகர் நினைவு உரை நிகழ்த்திய திரு வி.எஸ். விவேகானந்தா "கந்தையா உபாத்தியாயர் தமிழுக்கும் சைவத்துக்கும் செய்த பணிகளால் ஸ்கந்தா இன்று உயர்ந்து மிளிர்ந்து நிற்கிறது" என்றார்.

வைத்திய கலாநிதி திருமதி ஆர் கனகேஸ்வரன் பரிசில்களை வழங்கினார். (உ-27)

## முஸ்லிம் மக்களின் கல்வி வளர்ச்சியில் தமிழர், பெரும்பங்கு

### கல்முனை எம்.பி. புகழாரம்

அம்பாறை, பெப். 24

'கல்முனைப் பிரதேச முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சியில் தமிழ் சகோதரர்கள் ஆற்றிய பங்களிப்பை நாம் என்றும் மறக்க முடியாது.'

-இவ்வாறு, கல்முனைத் தொகுதி கல்வித் தினக் கருத்தரங்கிற்குத் தலைமை வகித்து உரையாற்றிய முன்னாள் திவுலப்பிட்டிய மாவட்ட அமைச்சரும், கல்முனைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாப் ஏ ஆர். மன்சூர் கூறினார்.

கல்முனை மஹ்மூத் பாலிகா மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கல்வித் தினக் கருத்தரங்கில், கல்முனைத் தொகுதியைச் சேர்ந்த 650 ஆசிரிய, ஆசிரியைகள் பங்குபற்றினர்.

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் திரு. கே. டி. அருட்பிரகாசம் கருத்தரங்கில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

மாவட்ட அமைச்சர் ஜனாப். மன்சூர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது.

'கல்முனைப் பிரதேசத்தில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் கடந்த காலங்களில் மிக அந்நியோன்னியமாக வாழ்ந்து இந்த நாட்டுக்கே முன்மாதிரியாகத் திகழ்ந்தனர்.

ஒருவர் மதத்தை மற்றவர் மதித்தும், அபிலாஷைகளை மதித்தும் வாழ்ந்த எம் மக்கள் மத்தியில் சில அசம்பாவிதங்கள் நடந்துவிட்டமை வேதனையைத் தருகின்றது

இந்த நிலைமாறி மீண்டும் எம் மத்தியில் ஒற்றுமையும், ஐக்கியமும் வளர நாம் உழைக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார். (உ-14)

### கஞ்சா பயிரிட்டனராம்

முழங்காவில், பெப் 24

1983 ஜூலைக் கலவரத்தில் பாதிக்கப்பட்டு ஜெயபுரம் குடியேற்றத் திட்டத்தில் குடியேறியுள்ள அகதிகளில் சிலர் அரசாங்கத்தால் உப உணவு தானிய வகைகளை பயிரிட தமக்கு வழங்கப்பட்ட ஒன்றரை ஏக்கர் நிலத்தில் கஞ்சா பயிரிட்டனராம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் பயிர்களை முற்றாக அழித்து சம்பந்தப்பட்டவர்களைக் கடுமையாக எச்சரித்து விடுவித்தனர்.

### ஐக்கிய நாணய சபை

உடுப்பிட்டி, பெப் 24

துன்னாலை தெற்கு கலிகைச் சந்தன் ஐக்கிய நாணயசங்கம் கூட்டுறவுப் பரிசோதகர் திரு. க. துரைராஜா தலைமையில் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு பொ. சிவபாதம், செயலாளர் திரு சி. நவரத்தினம், பொருளாளர் திரு. பி புஸ்பராஜா.

ஒன்பதுபேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (இ-157)

### நெடுங்கேணி வர்த்தகர் சங்கம்

நெடுங்கேணி, பெப். 24

நெடுங்கேணி வர்த்தகர்சங்கக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது பின்வரும் உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்-அ க செல்வரத்தினம், உப-தலைவர் - நா. மகாலிங்கம், செயலாளர் - க. ஆறுமுகம், உப-செயலாளர்-ச. நித்தியானந்தம், தனாதிகாரி- நா. குணரத்தினம்.

நிர்வாகசபை உறுப்பினர்களாக ஏழுபேர் வருமாறு செ சங்கரப்பிள்ளை, க இரத்தினசிங்கம், நா துரைசிங்கம், க. பரமலிங்கம், நா. தனபாலசிங்கம், பொ கந்தசாமி, இ. சிவசேகரம். (இ-108

## வடமராட்சிப் பகுதியில் பாதிப்புற்றோருக்கு உதவி

### வல்வை பிரசைகள் குழு ஏற்பாடு

வல்வெட்டித்துறை, பெப் 24

இராணுவக் கெடுபிடிகளால் பாதிக்கப்பட்ட வடமராட்சி மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் வல்வைப் பிரசைகள்குழு தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது

வடமராட்சிப் பிரிவில் உள்ள பிரசைகள் குழுக்கள் ஊடாக நிவாரணம் வழங்கப்படும். இதற்கான கோப்புகள் தயாரிக்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் கரையோரப் பகுதியில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மீன் பிடி வலைகளும்—

விதவைகளுக்கு கால் நடைகளும்—

ஏனையோருக்கு சிறு கைத்தொழில்களை ஆரம்பிக்க ஊக்குவிப்புப் பணமும் வழங்கப்படவிருப்பதாக வல்வைப் பிரசைகள் குழு அறிவித்துள்ளது (உ-எ-160)

## மாட்டு வண்டியில் திருமண ஊர்வலம்

சுன்னாகம், பெப் 24

குடாநாட்டில் அரசின் எரிபொருள் விநியோகத் தடை திருமண விழாக்களை எவ்வாறு பாதித்துள்ளது என்பதை சமீபத்தில் சுன்னாகத்தில் நடந்த திருமண வைபவம் ஒன்றில் தெளிவாகத் தெரிந்தது

திருமணதினத்தன்று தாலி கட்டிய பின்புது மணதம்பதிகள் அலங்கரிக்கப்பட்ட மாட்டு வண்டியில் உற்றார் உறவினர்களுடன் சென்ற காட்சியை மக்கள் கண்டுகளித்தனர்

அழகிய அலங்கரிக்கப்பட்ட மாட்டுவண்டியைத் தொடர்ந்து பலர் சைக்கிள்களிலும் சிலர் ஒற்றைத் திருக்கல் மாட்டுவண்டிகளிலும் சென்றது பண்டைத்தமிழர் திருமண வைபவங்களை ஞாபகமூட்டுவதாக இருந்தது

# மாகிலம் - மாவட்டம் - உள்ளூர்

## தமிழ்க்கலைஞர்களை கௌரவிப்பதில் மாற்றுந்தாய் மனப்பான்மை ஏன்?

### 'மனித மாடு' வெளியீட்டில் துணைவேந்தர் வித்தி கேள்வி

யாழ்ப்பாணம், பெப் 24

சிங்கள எழுத்தாளர்கள், கலைஞர்களை கௌரவித்து அவர்களுக்கு ஓய்வூதியம், வீடு போன்ற பல்வேறு சலுகைகளை இலங்கை அரசு வழங்குகிறது

ஆனால் தமிழ்க் கலைஞர்களை இவ்வாறு பாராட்ட அரசு முன்வருவதில்லை. தமிழ்க் கலைஞர்களை மாற்றுந்தாய் மனப்பான்மையுடன் நடத்துவது ஏன்? இது வேதனை தருவதாகும்.

ஈழத்து மறுமலர்ச்சிக் கால எழுத்தாளர் திரு. அ. செ. முருகானந்தனின் "மனிதமாடு" என்ற சிறுகதை நூல் வெளியீட்டு விழாவில் வாழ்த்துரை வழங்கிய யாழ் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு வித்தியானந்தன் இவ்வாறு கேள்வி எழுப்பினார்

யாழ் மாவட்டக் கலாசாரப் பேரவையின் இலக்கியக் குழு இந்த நூல் வெளியீட்டு விழாவை நடத்தியது. நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடந்த விழாவுக்கு அரசாங்க அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கம் தலைமை வகித்தார்

யாழ் மாவட்டக் கலாசார பேரவையின் இலக்கியக்குழு இந் நூல் வெளியீட்டு விழாவை நடத்தியது.

நிப்பொன் றெலிட்ரவல்ஸ் உரிமையாளர் திரு நா. பொன்னுத்துரை, திரு அ சோமசுந்தரம்பிள்ளை, ஈழநாடு நிறுவன முகாமையாளர் திரு து சிவிவாசகம், உதயன் - சஞ்சீவி, ஷ்ரூ நிறுவனங்களின் நிர்வாக இயக்குனர் திரு. ஈ சரவணபவன், முரசொலி ஆளுநர் நாயகம் திரு. மு. சிவராசா, பூபாலசிங்கம் புத்தகசாலை உரிமையாளர் திரு பூ. சிறீதர்சிங் ஆகியோர் நூலின் பிரதிகளை "மல்லிகை" ஆசிரியர் திரு டொமினிக் ஜீவாவிடம் இருந்து பெற்றுர்கள்.

நாதஸ்வர கலாநிதி திரு. என். கே. பத்மநாதன் நூலாசிரியர் திரு. அ செ முருகானந்தன் அவர்களுக்குப் பொற்கிழி வழங்கி கௌரவித்தார்.

யாழ் மாவட்ட இலக்கிய குழு உறுப்பினரும் மூத்த இலக்கியவாதியுமான திரு. சி. சரவணபவன் தமது வரவேற்புரையில்

மனம் என்னும் வயலை உழுது, அன்பாம் பசளை இட்டு, பண்பெனும் விதைகளை நாட்டி, நீபவாம் களை பிடுங்கி, மானுடம் என்ற பயிரை அறுவடை செய்பவர்கள் "சொல்லேர் உழவர்"- என்றார்

திரு. தி. ச வரதராசன், பேராசிரியர் கலாநிதி அ சண்முகதாஸ் யாழ் பல்கலைக் கழக மருத்துவபீடத் தலைவர் பேராசிரியர் ந சிவஞானசுந்தரம், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திருமதி. வள்ளிநாயகி இராமலிங்கம் ஆகியோரும் உரையாற்றினர்.

நூலாசிரியர் திரு. அ செ முருகானந்தன் பதிலுரை கூறினார்.

யாழ் மாவட்ட கலாசாரப் பேரவைச் செயலர் திரு. ச பொ பாலசிங்கம் நன்றி கூறினார். (உ-9)

## விமர்சிப்பதை விடுத்து பங்காளிகளாக வேண்டும்

### அஞ்சலிக் கூட்டத்தில் கோரிக்கை

புங்குடுதீவு, பெப். 24

'விடுதலைப் போராட்டம்கூர்மையடைந்துள்ள இவ்வேளையில் வெளியில் நின்று விமர்சிப்பதை விடுத்து நாமும் பங்காளிகளாக மாறவேண்டும். விடுதலைப்போராட்டத்தில் தங்கள் உயிரைத் துச்சமெனமதித்து போராடும் விடுதலைப் போராளிகளின் தியாக உணர்விற்கு நாம் தலைவணங்கவேண்டும். அவர்களது வழியில் செயற்பட முன்வரவேண்டும்.''

இவ்வாறு கூறினார் புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. க, கருணாகரன்.

கைதடியில் வெடிவிபத்தில் சிக்கி உயிரிழந்த போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் புங்குடுதீவு புனித சவேரியர் தேவாலய முன்றலில் அஞ்சலிக் கூட்டமொன்று நடைபெற்றது. இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. கருணாகரன் தொடர்ந்துபேசுகையில், இன்னல்கள் சூழ்ந்து வரும் இவ்வேளையில் மக்கள் மிக்க விழிப்புடன் செயற்பட வேண்டியது அவசியம் என்றார்.

புங்குடுதீவு றோமன் கத்தோலிக்க வித்தியாலய அதிபர் திரு. க. திருச்செல்வம், திரு எஸ். குசைப்பிள்ளை, பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் திரு. க குணரத்தினம் ஆகியோர் உட்பட மற்றும் பலரும் இக்கூட்டத்தில் அஞ்சலி உரை நிகழ்த்தினர். (உ-131)

## ஹெல்மெட் இல்லையா? படையினர் வழங்கும் புதுவிதத் தண்டனை!

அம்பாறை, பெப் 24

அக்கரைப்பற்றுப்பகுதியில் ''ஹெல் மெட்'' (தலைக்கவசம்) அணியாமல் மோட்டார்சைக்கிள் ஓட்டிச்செல்பவர்களுக்கு புதுவித தண்டனை வழங்கப்படுகின்றது

அக்கரைப்பற்று விசேஷ அதிரடிப்படையினரே இந்த தண்டனையை வழங்குகின்றனர்.

''ஹெல்மெட்'' அணியாமல் அகப்பட்டுக் கொள்பவர், தான் அணிந்திருக்கும் ஷேர்ட்டைக் கழற்றி தலையில் சுற்றிக் கட்டிக்கொண்டு, பல தடவைகள் அக்கரைப்பற்று பஸார், வங்கிச்சந்தி முதலானவற்றை மோட்டார் சைக்கிளில் சுற்றிவரவேண்டும்

நான்கைந்து தடவை வலம் வந்ததும் மோட்டார் சைக்கிளின் சாவி மற்றும் லைசென்ஸ், காப்புறுதிப்பத்திரம் முதலானவற்றை வாங்கிக்கொண்டு அதிரடிப்படையினர் முகாமுக்குச் சென்று விடுகின்றனர்.

பின்னர் ''ஹெல் மெட்'' ஒன்றை வாங்கிச் சென்று முகாமில் காட்டிய பின்னர்தான் மோட்டார் சைக்கிளின் சாவி மற்றும் பத்திரங்களைப்பெற்று வரலாம். (இ-14)

# விளையாட்டரங்கு

ஐயனார் கோவிலடி சனசமூக நிலைய

## கரபந்தாட்ட இறுதிப் போட்டி

யாழ்ப்பாணம், பெப். 24

வண்ணார்பண்ணை ஐயனார் கோவிலடிசனசமூக நிலையத்தினர் நடத்திவரும் கரப்பந்தாட்ட இறுதிப்போட்டி நாளை 25 ஆம் திகதி மாலை 6 30 மணிக்கு மின்னொளியில் நடைபெறும்.

இருபத்தி நான்கு கழகங்கள் பங்குபற்றி இறுதி நிலைக்கு உடுப்பிட்டி, சிவன், வள்ளுவன், கலைமதி ஆகிய கழகங்கள் தெரிவாகியுள்ளன.

வெற்றி பெறுங்கழகங்களுக்கு திரு வே பொன்னம்பலம் தலைமையில் பரிசளிப்பு நடைபெறும் (இ)

## இளவாலையில் இல்ல விளையாட்டு போட்டி

வட்டுக்கோட்டை, பெப். 24

இளவாலை சென் ஹென்றீஸ் கல்லூரியும் இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயமும் இணைந்து நடத்தும் இல்ல மெய்வல்லுனர் போட்டி இம்மாதம் 28 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெறும்.

காங்கேசன்துறை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பி. சிவஞானசுந்தரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

திருமதி ஏ சிவஞானசுந்தரம் பரிசில்களை வழங்குவார். (இ-161)

சங்கானை

## வைத்திய நிலைய சுத்தத்தைப் பேண அரச அதிபரிடம் கோரிக்கை

வட்டுக்கோட்டை, பெப். 24

சங்கானைச் சந்தைக்கு அருகேல் அமைந்துள்ள மகப்பேறு — வைத்தியசாலையின் சுற்றாடலில் சுத்தத்தையும் அமைதியையும் பேண நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க அதிபரிடம் கேட்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப மகப்பேறு-வைத்திய நிலையத்தில் வலிகாமம் மேற்கில் உள்ள பல கிராமங்களைச் சேர்ந்த நோயாளர்கள் சிகிச்சை பெறுவதுண்டு.

ஆனால் அதற்கு அருகில் உணவுப் பொருள் உற்பத்தி நிலையம், கைத்தொழில் நிலையங்கள் என்பன நிறுவப்பட்டிருப்பதால் வைத்திய நிலைய நோயாளர் பாதிக்கப்படுகிறார்கள்.

அதனைக் கருத்தில் கொண்டே பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் மேற்கண்ட கோரிக்கையை அரச அதிபருக்கு விடுத்துள்ளனர்.

இது சம்பந்தமாக மாக பிரஸ்தாப கிராம அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்தை சங்கப் செயலாளர் அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்தார்.

எங்களது கிராமத்து மக்கள் பலருக்கு வைத்திய சேவையை செய்து வரும் சங்கானை சந்தைச் சதுக்கத்தில் அமைந்துள்ள மகப்பேறு வைத்தியசாலையின் சுற்றுடலில் அமைதியும் சுத்தமும் பேணுமாறும் இதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறும் எமது சங்கத்தினர் வேண்டுகின்றனர் என்று அந்தத் தீர்மானத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது (அ-161)

# செய்திக்கொத்து

### எட்டாவது இசை மேடை

வட்டுக்கோட்டை, பெப். 24

தெல்லிப்பழை கலை இலக்கியக் களத்தினரின் எட்டாவது இசை மேடை தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் இம்மாதம் 28 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 15 மணியளவில் நடைபெறும்.

சங்கீத வித்துவான் ஏ எம். வர்ணகுலசிங்கத்தின் இசை விருந்தும் நடிகமணி வி. வி வைரமுத்துவின் நாடக இசைக்கோலமும் இம் மேடையில் இடம் பெறவுள்ளன. (இ-161)

### காசோலை யாருடையது?

வட்டுக்கோட்டை, பெப் 24

50 ஆயிரம் ரூபாவுக்கான காசோலை ஒன்று வட்டுக்கோட்டை பிரதான வீதியில் அநாதரவான நிலையில் கண்டு எடுக்கப்பட்டு வட்டுக்கோட்டை கிழக்கு கிராம நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு உள்ளது

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையால் வழங்கப்பட்ட இக்காசோலையைக் கண்டு எடுத்த சிவானந்தசோதி என்பவர் வட்டு கிழக்கு பிரிவு தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அலுவலகத்திற்குச் சென்று இது பற்றி முறைப்பாடு செய்ததுடன் காசோலையையும் கையளித்தார். (இ-161)

### பஜனைமன்ற பொதுக் கூட்டம்

அராலி, பெப். 24

அராலி தெற்கு செம்பி தோட்ட ஞான வைரவர் ஆலய பஜனை மன்ற 24 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டமும் புது வருட நிர்வாகிகள் தெரிவும் 26 ஆம் திகதி நடைபெறும். (இ-ரி)

### கைதடிக்கு நிவாரண உதவி

கைதடி, பெப். 24

கைதடியில் நிகழ்ந்த வெடிவிபத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நிவாரண உதவி வழங்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (இ-74)

### சீட்டிழுப்பு

மானிப்பாய், பெப் 24

சங்குவேலி சனசமூக நிலையத்தின் வளர்ச்சிக்காக எதிர்வரும் சிவராத்திரி தினத்தன்று மாலை 6 மணியளவில் அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு ஒன்றை நடத்த உள்ளனர். (இ90)

### மில்க்வைற் அன்பளிப்பு

மகாசிவராத்திரி அன்று சமய தீட்சை வைக்கும் கோயில்கள், தாபனங்கள் ஆகியன சமய தீட்சைக்கான நித்திய கரும விதிசைவ அநுட்டான விதி விளக்கபுத்தகத்தை, மில்க்வைற் தாபனத்தாரின் விண்ணப்பப் செய்து இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

மனிதனைவிடச் சூழ்நிலையே வலிமை மிக்கது.

— நேருஜி


# உதயன்

இல,15, 2ஆவதுஒழுங்கைதொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி. 22073
யாழ்ப்பாணம் 24-02-1987 த.பெ.இல. 25


## மன்னார் கிளிநொச்சியில் இராணுவம் வென்றதா?

வடக்கைக் கைப்பற்றும் முயற்சியில் அரசாங்கம் கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் இம்மாத முற்பகுதியில் பெரும் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டது.

தகவல் தொடர்பும், போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டதால் சரியான தகவல்கள் அப்போது கிடைக்கவில்லை. லங்காபுவத் மட்டும் படையினர் பெரும் சாதனைகளை நிலைநாட்டிவிட்டதாக, ஏதோ தர்மயுத்தம் நடத்தி வென்றுவிட்டதாக எக்காளம் போட்டது!

அது தெரிவித்தவாறு சாதனைகள் எதுவுமே பெரிதாக ஈட்டப்படவில்லை என்பதைக் கலவான எம். பி. திரு. டியு. குணசேகரா நாடாளுமன்றத்தில் புட்டுக்காட்டினார்.

போராளிகள் மீது படையினர் பெரும் தாக்குதல் எதையும் நடத்தவில்லை என்பதும் பொதுமக்கள்மீது அட்டூழியம் புரிந்தார்கள் என்பதுமே உண்மை என்ற தகவல்கள் இப்போது வெளிவந்து கொண்டிருக்கின்றன.

அதாவது போராளிகளைத் தாக்குவதாகவும் அழிப்பதாகவும் கூறிக்கொண்டு பொதுமக்களைத் தாக்கியும், துன்புறுத்தியும் அழிக்கும் வழமையான கைங்கரியத்தை இலங்கை அரசப்படை கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் செய்திருக்கின்றன என்பது வெளிப்பட்டு வருகிறது.

மன்னாரில் மாத முற்பகுதியில் நடந்த அட்டூழியங்களின் போது, 12 பொதுமக்கள் கொலைப்பட்டிருக்கின்றனர். 120 பேர் செய்த குற்றம் எதுவென்று தெரியாத நிலையில் கைது செய்யப்பட்டு பூஸாவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். கடைகளும், வீடுகளுமாகச் சுமார் 200 கட்டடங்கள் தரை மட்டமாக்கப்பட்டன. அடம்பன் ஆஸ்பத்திரியே தாக்கப் பட்டுவிட்டது. மற்றும் அரசாங்க அலுவலகங்கள் தனியார் அரிசி ஆலைகள் என்பனவும் சேதமாக்கப்பட்டிருக்கின்றன.

வேற்று நாட்டுப் படைகள் வந்து எதிரியின் பிரதேசத்தை அழித்து மக்களைக் கொன்று குவித்துப் பேரழிவு செய்வதற்கு ஒப்பான செயல்கள் இவை. இப்படிச் செய்து, இராணுவ முற்றுகையை அதிகரித்து தமிழ்மக்களை நெருக்குவதினால் அவர்களை அடிபணியச் செய்துவிடலாம் என்று அரசு வீண் கனவு காண்கிறது.

கட்டுப்பாடுகளும், நெருக்குதல்களும் அதிகரிக்க அதிகரிக்க, அடக்கு முறையும் அட்டூழியமும் பெருகப் பெருகத் தான், மக்கள் மத்தியில் சுதந்திர உணர்வும் வீரமும் உறுதி படைகின்றன. இதனை அரசாங்கம் புரிந்து கொள்ளத் தவறுகிறது. இராணுவ பலத்தால் மக்களை நெடுநாளைக்குப் பணிய வைத்து விடமுடியாது. அதனையும் அரச மூளைகள் உணரத் தவறிவிட்டன.

ஒரு பிரதேசத்தையும், அந்தப் பகுதி மக்களையும் அழிக்க முயற்சிக்கும் பாது, அரசு தங்களுடையது அல்ல என்று சம்பந்தப்பட்ட மக்கள் வெறுத்து ஒதுக்குவார்கள். அதனையும் ஜே. ஆர் அரசு உணர்வதாக இல்லை.

அரசு தமிழ்ப் பகுதிகளில் மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கைகள் மட்டுமன்றி சிவில் நடவடிக்கைகள்கூட, வேற்று அரசு ஒன்று தம்மை அடக்க முனைகிறது என்பதைத் தமிழர்கள் மேன்மேலும் உணர்ந்து கொள்ள உறுதி செய்பவையாக உள்ளன.

அதனால் தான் 'வேற்றுநாட்டு' அரசை எதிர்த்துப் போராடும் போராளிகள் தமிழ் மக்களின் பாதுகாவலர்களாக மாறி இருக்கிறார்கள். இது இயற்கையானது.

தனது அட்டூழியங்களை நிறுத்தாத ஒரு 'வேற்றுநாட்டு' அரசு விதிக்கும் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு எந்த மடையன் பேச்சுவார்த்தை நடத்தச் செல்வான்?

பெரும் பெரும் தத்துவங்களையும், கோட்பாடுகளையும் எடுத்துச் செல்லும் ஜே ஆருக்கு இந்தச் சிறிய விஷயம் புரியாமலா இருக்கிறது? இல்லை, இல்லை புரிந்தும் புரியாதவராக நடந்து கொள்கிறார் அவர்.

தாம் இறக்கும்போது ஜனாதிபதியாகவே கண்மூட வேண்டும் என்ற ஆசையோ என்னவோ!

ஏற்கேற்ற வகையில் தமது ஆட்சிக் காலத்தை இழுத்துச் செல்ல, சிங்கள மக்கள் மனதில் இருளைப் பரவச் செய்ய இனப்பிரச்சினை ஒரு உகந்த ஔடதம் என்று நினைத்திருப்பார் போலும்! போங்கள், அவர் மகா கெட்டிக்காரர்தான்! ஆனாலும் கெட்டிக்காரனின் புளுகு எத்தனை நாளைக்கு?

இலங்கை அரசுக்கு

## தான் விரும்பும் வேளை இந்தியா பதிலளிக்கும்

### தூதுவர் டிக்ஸிற் கூறுகிறார்

கொழும்பு, பெப். 24

எப்போது இலங்கை அரசுக்குப் பதில் அனுப்ப வேண்டும் என்று இந்தியா விரும்புகிறதோ அப்போது அனுப்பப்படும்.

— இப்படி கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு ஜே. என். டிக்ஸிட் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் அனுப்பிய கடிதத்திற்கு ஜனாதிபதி ஜெயவர்த்தனா சென்ற 13ஆம் திகதி விளக்கம் அனுப்பியிருந்தார்.

அந்த விளக்கம் குறித்து இந்திய அரசு எப்போது பதில் அனுப்பும் என்று கேட்டபோதே, இந்தியத் தூதர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

## அக்கினோ பதவி ஏற்று ஒரு வருடம்

மணிலா, பெப் 22

பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி கொறஸின் அக்கினோ பதவி ஏற்ற முதலாவது ஆண்டு நிறைவுதினம் தினம் இம்மாதம் 25ஆம் திகதி பிலிப்பீன்ஸில் விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதே நேரத்தில் முன்னாள் ஜனாதிபதி மார்க்கோஸின் ஆதரவாளர் சிலர் சதிப்புரட்சியை மேற்கொள்ளத் திட்டம் உருவாக்கியுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

இராணுவத்திலும் அரசாங்கத்திலும் உள்ள உயர் அதிகாரிகளைக் கொலை செய்யவும் வெளி மாகாணங்களில் உள்ள இராணுவ முகாம்களைத் தாக்கவும் இந்தச் சதிகாரர்கள் அத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாகக் கருதியிருந்தார்கள்.

சதிகாரர்களின் இம்முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளதாக ஆயுதபடைத் தளபதி பிரிடல் ராமோஸ் தெரிவித்தார். (ஒ)

# பாக் ஆயுதக் குவிப்பே நல்லுறவுக்குத் தடை!

## நாடாளுமன்றக்கூட்டத்தொடரை ஆரம்பித்து ஷெயில்சிங் உரை

புதுடில்லி, பெப்.23

பாகிஸ்தான் அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபடுவதும் நவீன ஆயுதங்களை குவிப்பதும் தான் இரு நாடுகளின் உறவை வளர்ப்பதற்குக் குந்தகமாக உள்ளது.

இப்படி இந்திய ஜனாதிபதி ஷெயில் சிங் தெரிவித்தார்.

இந்திய நாடாளுமன்றத்தின் இரண்டு சபைகளின் புதிய கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாகிஸ்தான் ஆயுதக் கொள்வனவு உற்பத்தியில் நாட்டம் காட்டுகிறது. இது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளது.

அயல் நாடுகளின் உறவுகளை வளர்த்துக் கொள்வதில் இந்தியா அக்கறை காட்டி வருகின்றது.

இப்படி ஜனாதிபதி ஷெயில் சிங் மேலும் சொன்னார். (இ-ஏ)

## ஏழு நிதி மந்திரிகள் பிரான்ஸில் கூடினர்

பாரிஸ், பெப்.23

ஏழு பிரதான முதலாளித்துவ கைத்தொழில் நாடுகளின் நிதிமந்திரிகள் ஏழு நேற்று பிரான்ஸில் மாநாடு ஒன்றை ஆரம்பித்தனர்.

இத்தாலி இதில் பங்கு பற்றப் போவதில்லை என அறிவித்திருந்தது.

ஜப்பானில் இந்த நாடுகளின் உச்சி மாநாடு கடந்த வருடம் நடத்தப்பட்டபோது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் சிலநாடுகளால் மீறப்பட்டுள்ளன என்றும் அதனாலேயே இத்தாலி இந்த முடிவை எடுத்ததாகவும் தெரிவித்தது.

உலக நாணய பரிவர்த்தனை விகிதாசாரங்களில் ஏற்றத் தாழ்வைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்காக பிரான்ஸில் இந்த மாநாடு கூட்டப்பட்டுள்ளது.

அமெரிக்கா, பிரிட்டன், மே ஜேர்மனி, ஜப்பான், பிரான்ஸ், கனடா ஆகிய நாடுகள் இதில் கலந்து கொள்கின்றன. (ஒ)

## பங்களாதேஷிடம் இந்தியா கோரிக்கை

புதுடில்லி,பெப் 22

பங்களாதேஷ் பிரசைகள் ஏராளமானோர் இந்திய மாநிலமான திரிபுராவினுள் அத்துமீறி குடியேறி வருவதை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு இந்தியா பங்களாதேஷைக் கோரியுள்ளது.

பங்களாதேஷின் சிட்டாகொங் மாநிலத்தில் இருந்து அகதிகளாக இவர்கள் திரிபுராவினுள் நுழைகின்றனர். சிட்டாகொங் பகுதியில் பழங்குடிமக்களின் வன்செயல், கிளர்ச்சி ஆகியன காரணமாக அகதிகள் இந்திய பிரதேசத்தினுள் ஊடுருவ ஆரம்பித்தார்கள்.

திரிபுரா மாநிலத்தில் உள்ள அகதிகள் முகாம்களில் சுமார் நாற்பதினாயிரத்து ஐநூறு பேர் தங்கியுள்ளனர்.

இவர்களை பங்களாதேஷிற்குத்திருப்பி அனுப்ப எடுக்கப்பட்ட முயற்சிகள் இதுவரையில் பலன் அளிக்கவில்லை. (ஒ)

### வழக்குத் தாக்கல்

புவனர்ஸ் அயர்ஸ், பெப் 23

ஆர்ஜென்டீனாவில் முன்னைய இராணுவ ஆட்சியில் மனித உரிமைகளை மீறி கொடுமை புரிந்த குற்றச்சாட்டின் பெயரில் 150 உயர் அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஆட்கடத்தல், சித்திரவதை, படுகொலை போன்ற குற்றங்களுக்காக ஏற்கெனவே 19 இராணுவ உயர் அதிகாரிகளுக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது (ஒ)

### ராஜீவ்- ஸியா சந்திப்பு

புதுடில்லி, பெப்.23

இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியும் பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியா உல் ஹக்கும் இருதடவைகள் சந்தித்து எல்லைப் புற பதட்டம் பற்றி ஆராய்ந்தனர். பாதிப் படைந்த உறவுகளை சமூகநிலைக்குக் கொண்டு வருவதற்கும் கருத்துப் பரிமாற்றம் இடம் பெற்றது. வர்த்தகம் கலாசாரம் ஆகிய துறைகளில் தொடர்புகளை விருத்தி செய்வது பற்றியும் பேச்சுவார்த்தை நடந்தது. (ஒ)



## மாணவர் பிரச்சினை ஸ்பெயினில் தீர்வு

மட்ரிட்,பெப்.23

ஸ்பெயினில் மாணவர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

கல்விச் சீர்திருத்த நடவடிக்கைகள் தொடர்பாக அதிகாரிகளுக்கும் மாணவர்களுக்குமிடையே நிலவி வந்த சர்ச்சை இதனால் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

மாணவர் தலைவர்களும் அரச பிரதிநிதிகளும் இதனை அறிவித்தார்கள்.

கடந்த மூன்று மாதங்களாக உயர் நிலைப்பாடசாலை மாணவர்களிடையே நிலவி வந்த அமைதியின்மை இதனால் நீங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இடை நிலை பாடசாலை மாணவரிடமிருந்து கட்டணம் அறவிடுவதில் இன்னும் குறைந்த வருமானம் உள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கு கட்டணத்தில் இருந்து விலக்களிப்பதெனவும் அரசாங்கம் செய்த முடிவை மாணவர்கள் வரவேற்றுள்ளனர். (ஒ)

## ஜோர்ஜ் புஷ் ஜனதிபதி வேட்பாளராக தேர்தலில் போட்டியிட முயற்சி

வாஷிங்டன்,பெப் 23

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக திரு. ஜோர்ஜ் புஷ் முயற்சி எடுத்து வருகிறார்.

தற்சமயம் திரு. புஷ் உப ஜனாதிபதியாக பணி புரிகிறார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் 1988 நவம்பரில் நடைபெற உள்ளது.

இப்பொழுதே ஜனாதிபதி வேட்பாளர் தெரிவுக்கு திரு. புஷ் தன்னைத் தயார் செய்ய ஆரம்பித்து விட்டார்.

இரண்டு முறை ஜனாதிபதியாகப் பதவி வகித்து வரும் திரு. றேகன் அடுத்த ஆண்டுத் தேர்தலில் அரசமைப்புச் சட்டப்படி போட்டியிட முடியாது.

இதனிடையில் ஈரான் ஆயுத விவகாரம், நிக்கரகுவா கிளர்ச்சியாளருக்கு நிதி கொடுத்தது ஆகியன காரணமாக திரு. புஷ்ஷின் செல்வாக்கு குறைந்து வருவதாகக் கருத்துக் கணக்கெடுப்பில் தெரிய வந்துள்ளது.

இதன் காரணமாக திரு. றேகனின் நடவடிக்கைகளுக்கும் தனக்கும் சம்பந்தமே இல்லை என்று திரு. புஷ் பகிரங்கமாகச் சொல்லி விட்டார். (ஒ-ஏ)

# முறுக்குக் கயிற்றை வீசி சவுக்கால் அடிப்பது போன்று எம்மைத் தாக்கினர்

## வல்வை மீனவர்கள் தகவல்

(வல்வைச் செய்தியாளர் சி. சுந்தரலிங்கம்)

வல்வெட்டித்துறை, பெப் 24

நாம் பயந்து போய் நின்றோம் கடற்படையினர் துப்பாக்கிகளை எம் தலைக்கு நேரே பிடித்து மிரட்டினர். பின்னர் முறுக்குக் கயிற்றை வீசி சவுக்கினால் அடிப்பது போல் எம்மை அடித்தனர்.

வல்வைக் கடலில் சனிக்கிழமை காலை இடம்பெற்ற சம்பவங்களில் மீனவர்கள் பலர் கடற்படையினரால் தாக்கப்பட்டனர்.

அவர்களது மீன்பிடிப் படகு இயந்திரங்கள் கடற்படையினரால் கடலுக்குள் வீசப்பட்டன.

இச்சம்பவங்களில் பாதிக்கப்பட்ட மீனவர்களில் இன்பருட்டியைச் சேர்ந்த செல்லக்கதிரமலைதாஸ் (வயது 28) இராசமாணிக்கம் குழந்தைவேல் (வயது29) ஆகியோர் மேற்கண்டவாறு உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

அவர்கள் சொன்னதாவது:-

நாம் இன்பருட்டி கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தோம்.

இலங்கைக் கடற்படையின் பீரங்கிப் படகுகளான வீரயா, சூரயா இரண்டும்பெரும் இரைச்சலுடன் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்த வண்ணம் எமது மீன் பிடிபடகைச் சுற்றி வட்டமிட்டன.

படகை பீரங்கிப் படகுகள் பின்னர் நெருங்கி வந்தன.

கடற்படையினர் பின்னர் எமது படகில் உள்ள என்ஜினைக் கழற்றித் தருமாறு கேட்டனர்.

நாம் பயந்து போய் நின்றோம். படையினர் துப்பாக்கிகளை எம் தலைக்கு நேரே பிடித்து மிரட்டினர்.

பின்னர் முறுக்குக் கயிற்றை வீசி சவுக்கினால் அடிப்பது போல் எம்

படி பல தடவை அடித்தனர்.

### கயிற்றில் கொழுவி கடலில் தோய்த்தனர்

நாம் என்ஜினைக் கழற்றிக் கொடுத்தோம். அவர்கள் என்ஜினை கயிற்றில் கொழுவி கடலில் தோய்த்து எடுத்து விளையாட்டுக்காட்டி விட்டு கடலினுள் போட்டு விட்டனர்.

பின்னர் எம்மை கடல் பக்கம் வரக் கூடாது என்று எச்சரித்தனர்.

அப்படி வந்தால் சுடப்படுவோம் என்றும் கடற்படையினர் எச்சரித்தனர்.

பாயின் உதவியுடன் நாம் படகைக் கரைக்குச் செலுத்தி வந்தோம்-

இப்படி அவர்கள் சொன்னார்கள்.

### கொச்சைத் தமிழில் வெருட்டினர்

வல்வெட்டித்துறை, காட்டுவளவு என்னும் இடத்தைச் சேர்ந்த சிவகுமார் சுஜேந்திரன் (வயது 20), பொன்னம்பலம் ரகுநாதன் (வயது 19) ஆகியவர்கள் சொன்னதாவது;

நாம் வலைகளை இழுத்துக்கொண்டிருந்தபோது பருத்தித்துறைப் பக்கம் இருந்து வேகமாக கடற்படைக் கப்பல் ஒன்று துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்த வண்ணம் வந்தது.

படகு அருகே வந்ததும் என்ஜினைக் கழற்றித் தரும்படி சிப்பாய்கள் கேட்டனர். வலைகளை அறுக்கச்சொல்லி கொச்சைத் தமிழில் வெருட்டினர்.

எம்மைக் கயிற்றினால் கட்டி கப்பலில் ஏற்றினர் பின்னர் சப்பாத்துக் காலினாலும் [illegible] மாறி மாறி எம்மைத் [illegible]

### புலிகள் எங்கே

புலிகள் எங்கிருக்கிறார்கள் என்றுகேட்டே தாக்[illegible]

யாது என்று சொன்ன போதும் தாக்கினர்.

எம் கண்முன்னாலேயே நாம் கழற்றிக்கொடுத்த 11,500 ரூபா பெறுமதியான என்ஜினை கடலினுள் சிப்பாய்கள்போட்டனர்.

'புலிகளின் தலைவர் பிரபாகரனிடம் போய்ச் (4-ம் பக்கம் பார்க்க)



### ஞான வைரவர் ஆலயத்தில்

யாழ்ப்பாணம், பெ 24

ஆனைக்கோட்டை உயரப்புலம் வீதியில் எழுந்தருளி இருக்கும் அருள்மிகு ஸ்ரீ ஆலடி ஞான வைரவர் ஆலயத்தில் எதிர்வரும் வியாழக்கிழமை மஹா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு விசேட அபிஷேகங்களும் ஆராதனைகளும் நடைபெறவுள்ளன. (இ-10)

### கடையில் சுவாமிகோவிலில் சிவராத்திரி

யாழ்ப்பாணம், பெப் 24

கடையிற்சுவாமி கோவில் சிவராத்திரி விழா இம்முறை வேத ஆகம முறை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

பகலில் விரத ஆரம்பமும் இரவு நான்குகால பூசைகளும் திருமுறை ஓதல், புராணப்படிப்பு என்பனவும் இடம் பெறும். (இ-10)

### மாயக்கைப் பிள்ளையார் கோவிலில்

பருத்தித்துறை, பெப்.14

புலோலி மேற்கு மாயக்கைப் பிள்ளையார் கோவிலில் இம்முறை மகா சிவராத்திரி விழா [illegible]

இவ்விழா புலோலி [illegible] கிராம அபிவிருத்திச் சபைத் தலைவி திருமதி. ம. பாலகிருஷ்ணன் தலைமையில் [illegible]





குறள்:

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

பொருள்:

எண் என்று சொல்லப்படுவன, எழுத்து என்று சொல்லப்படுவன ஆகிய இரு வகைக் கலைகளையும் வாழும் மக்களுக்குக் கண்கள் என்று கூறுவர்.

# யாழ் சென்று திரும்பும் செய்தியாளர்களிடமிருந்து

## அரசு தகவல்களைத் திரட்டுகிறது

கொழும்பு, பெப். 24

யாழ்ப்பாணம் சென்று திரும்பும் வெளிநாட்டுச் செய்தியாளரை அரசின் வெளிநாட்டுப் பிரசாரப் பிரிவுப் பணிப்பாளர் சந்தித்து, அவர்களிடமிருந்து விவரங்களைத் தெரிந்து கொள்கிறார்.

இப்படி பிரதி வெளிநாட்டு அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ அண்மையில் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

தீவிரவாதச் செயல்களினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வெளிநாட்டுச் செய்தியாளர்களை செல்ல அனுமதிப்பதில் கடைப்பிடிக்கப்படும் நடைமுறைகள் பற்றி பிரதிஅமைச்சர் நாடாளுமன்றத்தில் விவரம்வெளியிட்டார்.

அவை வருமாறு;

நாட்டின் அரசியல் நிலைமை குறித்து செய்தி சேகரிக்க விரும்பும்வெளி நாட்டுச் செய்தியாளர்கள், டெலிவிஷன் செய்தியாளர்கள்இலங்கைக்கு வருமுன்னர் அந்த அந்த நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

அந்த விண்ணப்பங்கள் தேசிய பாதுகாப்பு (4ம் பக்கம் பார்க்க)

### ஸ்ரீ சத்திய சாயி இல்லத்தில்

யாழ்ப்பாணம், பெப் 24

நல்லூர் ஸ்ரீ சத்திய சாயி இல்லம் நடத்தும் மகா சிவராத்திரி தின நிகழ்ச்சிகள் எதிர்வரும் வியாழன் நல்லூர் நல்லலஷ்மி அவனியூவில் உள்ள ஸ்ரீ சத்திய சாயி இல்லத்தில் நடைபெறவுள்ளன.

நான்கு யாமங்களும் அபிஷேகம், பஜனை, திருமுறை ஓதல், நசரசங்கீர்த்தனம் முதலியன இடம்பெறும். (எ)

சொற்பொழிவை முன்னாள் ஆசிரியர் திரு எஸ். திருநாவுக்கரசு முதலி மேற்கொள்வார்.



## பலாலி ஆசிரியர் கலாசாலை அதிபர் தரும் விளக்கம்

19 02 87 வியாழக்கிழமை வெளியான தங்கள் தினசரியில் 2ஆம் பக்கத்தில் "பெரும் சிரமங்கள் மத்தியில் பயிற்சி பெறும் ஆசிரியர்கள்" என்னும் செய்தியில் தவறான சில கருத்துக்கள் வெளியானதையிட்டு வருந்துகின்றோம்.

பொதுவாகத் தங்கள் தினசரி காட்டும் சமூக நலன் நாடிய பணிக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். செய்தியின் இறுதிப்பகுதி கோப்பாய் ஆசிரிய கலாசாலையினர் பற்றி ஒரு தப்பெண்ணத்தை ஏற்படுத்துவதால் இந்த விளக்கத்தை அளிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

செய்தியில் குறிப்பிட்ட எல்லா வசதிகளுமே எமக்குத் தரப்படவில்லை என்பது தவறு விடுதி வசதி, மண்டப வசதி என்பன வழங்கப்பட்டு வருகின்றன. திர்வாகச் சிக்கலால் நூல் நிலையம் எமது கலாசாலைக்குத் திறந்து விடப்படுவதில்லை என்பதே சரி.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை எமக்குச் செய்து வரும் உதவிகளுக்கு நாம் மிகவும் கடமைப்பட்டுள்ளோம்.

அதிபர் வே. பரமேஸ்வரநாதன்
பலாலி ஆசிரியர் கலாசாலை

ஆசிரியர் குறிப்பு:

[பலாலி ஆசிரியர் கலாசாலை ஆசிரிய மாணவர்கள் பலர் செய்து கொண்ட முறைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டே குறைபாடுகள் நீக்கப்பட வேண்டும் என்ற நன்நோக்குக் கருதிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உடுவில் மகளிர் கல்லூரி**
(Dept. of Further Education)

National Certificate of Education
— English

லண்டன் நிறுவனம் நடாத்தும் இத் தேர்வு யாழ் மாவட்டத்தில் நடைபெற ஏற்பாடு உண்டு.

Director

# உதயன்

24 - 02 - 1987 செவ்வாய்க்கிழமை

**உடுவில் மகளிர் கல்லூரி**
(Dept. of Further Education)

1. National Certificate of Education -- English
லண்டன் தேர்வு.
2. STENOGRAPHY
ஆரம்பம்: 09-03-87
✶ விடுதி வசதி உண்டு ✶
-- Director

# நகைகளை பாதுகாப்பாக கொண்டுவர விமானம் இல்லையாம்!

யாழ்ப்பாணம், பெப் 24
வடபகுதி மக்களின் அடகு நகைகளை பலாலி முகாமுக்குப் பாதுகாப்பாகக் கொண்டுவந்து வைப்பதற்குப் பாதுகாப்பு அமைச்சில் விமானங்கள் இல்லை.

கொழும்பில் முப்படைத் தளபதி சிறில் ரணதுங்காவை யாழ் அரச அதிபர் சந்தித்துப் பேசிய போது முப்படைத் தளபதி இவ்வாறு தெரிவித்தாராம்.

இதனை யாழ் அரச அதிபர் அடகு வைத்தோர் சங்கப் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள வடபகுதி மக்களின் அடகு நகைகளை பலாலி முகாமுக்குப் பாதுகாப்பாகக் கொண்டுவந்து தர முடியும்.

ஆனால் பாதுகாப்பு அமைச்சில் இருக்கும் சகல விமானங்களும் சேவையில் ஈடுபட்டிருப்பதால் விமான வசதி இல்லை. என்றும் வங்கி நிர்வாகம் 'உபாலி' விமானத்தை வாடகைக்கு அமர்த்தும் பட்சத்தில் அடகு நகைகள் பலாலிக்குப் பாதுகாப்பாகக் கொண்டுவந்து தரப்படும்—

இவ்வாறு முக்கூட்டுத் தளபதி சிறில் ரணதுங்கா யாழ். அரச அதிபரிடம் தெரிவித்தாராம். (இ-10)

## முறுக்குக்---

(3-ம் பக்கத்தொடர்ச்சி)
செலுங்கள் அவர் நஷ்டஈடு தருவார்' இப்படி ஏளனமாக சிப்பாய்கள் தெரிவித்தனர்.

கடற்படைக் கப்பலில் நின்ற எம்மை கயிற்றில் கட்டி கடலினுள் பல தடவை தோய்த்து எடுத்த பின்னரே எம்மை படகில் விட்டனர்.

கடல் பக்கம் கண்டால் சுட்டுவிடுவோம் என்றும் எம்மை எச்சரித்தனர்.

இப்படி இவர்கள் தெரிவித்தனர்.

இன்பருட்டியைச் சேர்ந்த இராமசாமி குமாரகுரு(வயது 45),வடிவேலு யோகராசா வயது (வயது 25) ஆகியோர் சென்ற மீன்பிடிப் படகின் 6,000 ரூபா பெறுமதியான என்ஜினும்—

ஆதிகோவிலடி வாசிகளான முத்துக்குமாரு ஞானரத்தினம் (28 வயது), இராமசாமி மனோகரதாஸ் (வயது14) ஆகியோரின் 18,000 ரூபா பெறுமதியான என்ஜினும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டு கடலுக்குள் வீசப்பட்டன.

(இ-எ-160)

**யாழ் நகரிலே**

வாடிக்கையாளர். நண்பர்களிடத்தில் நன்மதிப்பையும் HOTEL அனுபவத்தில் முதன்மையும் பெற்று கடந்த June 1ஆம் திகதி முதல் தங்கள் நிர்வாகத்தில் புது மெருகுடன் Hotel Gnanams நிர்வாகத்தை நடத்தி வந்த R. S R Green Peking Palace ஸ்தாபனத்தார் தங்கள் தரமான சேவையுடன் யாழ். நகரிலே இன்று புகழுடன் முதன் முதலாக அறிமுகம் செய்த Beer Garden (Beer with Spanish Omelette) Rs. 32/- மற்றும் தரமான Chinese உணவுகளுடன், காலை 7-00 மணி முதல் இரவு 11-00 மணி வரை சேவைசெய்து வருகின்றனர்

[எங்கள் சேவை 15-2-87 முதல் HOTEL GNANAMS இல் இல்லை]

ஏமாற்றத்தைத் தவிர்த்துக்கொள்ள தொடர்ந்தும் சிரமத்தை எதிர்பாராது நாடுங்கள், உங்கள் மனதில் இடம் பிடித்துக் கொண்ட,

**R. S.R.**
**Green Peking Palace**
(வேறு எந்த ஒரு கிளைகளும் இல்லை)

4th Cross Street,
JAFFNA.

## யாழ் சென்று..

(3-ம்பக்கத் தொடர்ச்சி)
அமைச்சு, இராஜாங்க அமைச்சு ஆகியவற்றினால் பரிசீலனை செய்யப்படும்

அனுமதி வழங்கப்பட்டவுடன் கொழும்பு வரும் வெளிநாட்டுச் செய்தியாளர்கள் முதலில் அரசின் வெளிநாட்டுப் பிரசாரப் பிரிவின் பணிப்பாளரைச் சந்திக்க வேண்டும்.

எங்கு செல்ல வேண்டும்; யாரைச் சந்திக்க வேண்டும் என்பன பற்றி எல்லாம் பணிப்பாளர் செய்தியாளர்களுக்கு விவரிப்பார்.

யாழ்.பயணம் சென்று கொழும்பு திரும்பியதும் செய்தியாளர்களை அரசின் வெளிநாட்டுப் பிரசாரப்பிரிவுப் பணிப்பாளர் மீண்டும் சந்தித்து யாழ் விவரங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்கிறார்.

ஒரு பக்க சார்பான செய்திகளை வெளியிடும் செய்தியாளர்கள் மீண்டும் இலங்கைவர அனுமதிக்கப்படுவதில்லை. இதை உணர்ந்து வெளிநாட்டுச் செய்தியாளர் நடக்கின்றனர்.

இந்த நடவடிக்கையினால் எமக்கு சாதகமான நிலை உருவாகியுள்ளது.

இதன் பலன் டைம், வாஷிங்டன் போஸ்ட், நியூஸ்வீக் சஞ்சிகைகளில் தெரிகிறது.

அண்மையில் வந்த 'டைம்' சஞ்சிகையைப் பாருங்கள். அதன் புதுடில்லி செய்தியாளர் மக்ரே அண்மையில் யாழ் சென்று திரும்பிய பின்னர் எழுதியகட்டுரை அதில் பிரசுரமாகியுள்ளது.

கொழும்பில் உள்ள வெளிநாட்டுச் செய்தியாளர்களுடன் அடிக்கடி நாம் தொடர்பு வைத்துள்ளோம்.

ராய்ட்டர், ஏபி' ஏஎப்பி, ஐபிஎஸ், ஆகாசவாணி, பிரிஐ, யுஎன்ஐ ஆகியன உட்பட 20 வெளிநாட்டுச் செய்தியாளர்கள் கொழும்பில் உள்ளனர்.

இப்படி பிரதி அமைச்சர் தெரிவித்தார். (இ-எ)

## சென் ஜோன்ஸுக்கு இன்னிங்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், பெப் 24
யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி இன்னிங்ஸ் வித்தியாசத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை வென்றது.

கடந்த வெள்ளி, சனிக்கிழமைகளில் இப்போட்டி கொக்குவில் இந்து மைதானத்தில் நடைபெற்றது.

கொக்குவில் இந்து அணி முதல் இன்னிங்ஸில் 139 ஓட்டங்களை எடுத்தது

மதிதரன், கிருபானந்தன், பேரின்பநாதன் முறையே 33, 46, 18 ஓட்டங்களை எடுத்தனர்

வாகீசன் 20 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், சஞ்சீவன் 25 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் அகிலன் 20 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்கள்.

சென் ஜோன்ஸ் அணி முதலாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 336 ஓட்டங்கள் எடுத்தது.

புவனரட்னம், ராஜ்குமார், வாகீசன் முறையே 90, 54, 64 ஓட்டங்கள் எடுத்தனர் நேசகுமார் 76 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

கிருபானந்தன் 61 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

கொக்குவில் இந்து இரண்டாவது இன்னிங்ஸில் 141 ஓட்டங்கள் எடுத்தது.

மோகன், கிருபானந்தன், பேரின்பநாதன் முறையே 41, 26, 23 ஓட்டங்கள் எடுத்தனர்.

சஞ்சீவன் 31 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் நேசகுமார் 13 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். (இ-எ)

## யாழ் இந்து வெற்றி!

யாழ்ப்பாணம்,பெப். 24
யாழ் இந்துக் கல்லூரி அணி 10 விக்கெட்டுக்களினால் சென் பட்ரிக்ஸ் கல்லூரி அணியைத் தோற்கடித்தது.

கல்லூரிகளுக்கு இடையேயான கிரிக்கெட் விளையாட்டுப் போட்டிகளின் ஒரு கட்டமாக இம்மோதல் கடந்த வெள்ளி, சனிக்கிழமைகளில் யாழ் இந்து மைதானத்தில் நடைபெற்றது

இந்து அணி முதல் இன்னிங்ஸில் எல்லா விக்கெட்டுக்களையும் இழந்து 173 ஓட்டங்களையும் எடுத்தது.

சுரேஷ், ராமேஷ்வரன் திலீபன், பத்மபிரகாஷ் ஆகியோர் முறையே 42, 30, 30, 24 ஓட்டங்களை எடுத்தனர்.

சவுந்தரநாயகம் 67 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களையும் வாசன் 62 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்கள்.

சென் பட்ரிக்ஸ் அணி முதல் இன்னிங்ஸில் எல்லா விக்கெட்டுக்களையும் இழந்து 41 ஓட்டங்களை எடுத்தது

சவரிமுத்து 16 ஓட்டங்களை எடுத்தார்.

பிரபானந்தன் 13 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களையும் ரவிக்குமார் 12 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

சென் பட்ரிக்ஸ் அணி இரண்டாவது இன்னிங்ஸில் எல்லா விக்கெட்டுக்களையும் இழந்து 157 ஓட்டங்களை எடுத்தது.

சவுந்தரநாயகம், நிமல்ராஜா, சவரிமுத்து ஆகியோர் தலா 26 ஓட்டங்களையும் மோகன் 24 ஓட்டங்களையும் எடுத்தனர்.

கார்த்திகேயன் 43 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். ரவி, உமையானன், பிரேம்நாத் ஆகியோர் முறையே 29, 5, 18 ஓட்டங்களுக்கு தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் இழப்பு எதுவும் இன்றி 26 ஓட்டங்களை எடுத்தது.

திலீபன், பத்மபிரகாஷ் முறையே 8, 14 ஓட்டங்களை எடுத்தனர். ஆட்ட முடிவின் போதும் அவர்கள் ஆட்டமிழக்காமல் இருந்தனர். (இ-எ)

## பஸ் சேவை மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப் 24
யாழ் குடாநாட்டுக்கான மட்டுப்படுத்தப்பட்ட பஸ் உள்ளூர் சேவைகள் நேற்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.

வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்கு போதுமான அளவு டீசல் கிடைக்காததாலேயே கடந்த மூன்று நாட்களாக உள்ளூர் சேவைகள் நிறுத்தப்பட்டிருந்தன. (இ-10)

## சென்ஜோன்ஸ் உபஅதிபர் மணிவிழா

யாழ்ப்பாணம், பெப். 24
யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரி உபஅதிபர் திரு. கா. பஞ்சலிங்கம் அவர்களின் மணிவிழா எதிர்வரும் வியாழக்கிழமை காலை கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ். வித்தியானந்தன் தலைமைவகிப்பார்.

மணிவிழாக்குழு இதற்கான ஒழுங்குகளைச் செய்கிறது. (இ-எ)

## இலங்கை - - -

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
னால் தமிழ்ப் பொது மக்களுக்கு ஏற்படும் இன்னல்கள், உயிர்ச் சேதங்கள் குறித்து இந்தியா ஆழ்ந்த கவலை கொண்டு உள்ளது.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு அரசியல் பேச்சு வார்த்தைகள் மூலம் தான் காணப்பட வேண்டும்,

இப்படி ஜனாதிபதி ஜெயில்சிங் தெரிவித்தார்.

(இ-எ)

## ஓமந்தையில்..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
றது.

கண்ணிவெடித் தாக்குதலின் பின்னர் போராளிகளுக்கும் முகாமில் இருந்து விரைந்து சென்ற இராணுவத்தினருக்கும் இடையில் நேரடிமோதல் நடந்ததாகவும் தெரிய வந்தது.

அவ்வேளை ஹெலிக்கொப்டர்கள் வானப் பாதுகாப்பு வழங்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தன.

நேரடி மோதலிலும் சில சிப்பாய்கள் கொல்லப்பட்டிருக்கலாம் எனப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(அ-10)

## மன்னாரில் நெற்செய்கை பெருமளவு பாதிப்பு

மன்னாரில் இம்முறை நெற்செய்கை பெருமளவு பாதிப்படைந்துள்ளது.

இவ்வாறு மன்னார் பிரசைகள் குழுச் செயலாளர் தெரிவித்தார்.

எதிர்பார்த்தளவு மழையில்லாததால் மனுவாரிச்செய்கை பெருமளவு பாதிப்படைந்துள்ளது

அதேசமயம் இராணுவத்தினரின் இம்மாத மன்னார் முற்றுகையால் குளங்களிலிருந்து நீர்ப்பாய்ச்ச முடியவில்லை. பரப்புக்கடத்தான் பகுதிகளிலுள்ள நெற்செய்கையாளர்கள் அறுவடை செய்ய முடியாத நிலையில் உள்ளனர்.

இவர்கள் வயல்களுக்குச் செல்ல முடியாதவாறு இராணுவத்தினர் தடை விதித்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (இ-5)

### தாக்கப்படுகின்றனர்

மன்னார் மாவட்டத்தில் அரச, தனியார் போக்குவரத்து பஸ்களில் தமிழர்கள் சாரதியாக வேலை செய்ய முடியாது என சிப்பாய்கள் அறிவித்துள்ளனர்.

தமிழர்கள் செலுத்தி வரும் வாகனங்கள் சிப்பாய்களினால் அடித்து நொருக்கப்படுவதாகவும் சாரதிகள் தாக்கப்படுவதாகவும் தெரிய வருகிறது (உ-10)

## புலிகள் தளபதி - - -

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
னின் தமையன் என்று அடையாளம் காணவில்லை.

1. பூரணம்பிள்ளை (59 வயது) - தாய்
2. தமயந்தி (24வயது) சகோதரி
3 சுந்தரலிங்கம் (36 வயது) - சகோதரன் (நாவிதன் வெளி அ. த. க பா. ஆசிரியர்)
4. சரஸ்வதி (29 வயது) - மனைவி
5. சுதர்ஷினி(9வயது) -மகள்
6 புவேந்திரன் (6 வயது)-மகன்
7. கிரிதரன் (3 வயது) -மகன்
8. மாணிக்கபோடி (70 வயது) -மாமா

ஆகியோரே கொல்லப்பட்டவர்கள் ஆவர்.

றேகனுக்கு தகப்பனார் இல்லை. இவரது தம்பி பூஸாவில் தடுப்புக் காவலில் இருக்கிறார். அதனால் அண்ணனும் ஒரு தம்பியுமே உயிர் தப்பினர்.

கொலையின் பின்பு இரு வீடுகளிலும் காணப்பட்ட சுவரொட்டிகளில் 'றேகன் தலைமையில் எல். ரி. ரி. ஈ அம்பாறையிலுள்ள அப்பாவி மக்களை ஈவிரக்கமின்றி வெட்டியும் சுட்டும்கொன்றது. அதனால் தமிழ் ஈழம் எடுக்க முடியாமல் போய்விட்டது.

அதற்கு எச்சரிக்கையும் தண்டனையுமாக றேகன் குடும்பமும் ஈவிரக்கமின்றி அழிக்கப்படுகிறது.

– ஈ பி. ஆர். எல். எவ். இப்படித் தெரிவிக்கப்பட்டிருந்தது

ஆனால் இக்கொலைகளை எந்தவொரு போராளிகள் குழுவும் செய்திருக்க முடியாது என பொதுசன வட்டாரங்களில் கருத்து நிலவுகிறது.

இது இவ்வாறிருக்க அன்றிரவு வயலுக்கு சூடு மிதிக்க சென்ற நீர்ப்பாசன இலாகா ஓவசியர் தாசன் (30 வயது) என்பவர் பற்றி இதுவரை தகவல் இல்லை.

அவர் சென்ற சைக்கிள் எடுத்து சென்ற விவசாய உபகரணங்கள் வீதியில் கிடந்தன. இரத்தக் கறைகளும் காணப்பட்டன. (இ-21)

யாழ்ப்பாணத்தில் மகளிருக்கென
தனி ஒரு நிறுவனம்
**S. M. .V. INSTITUTE**
340, கே. கே. எஸ் வீதி,
(மனோகரா தியேட்டருக்கண்மையில்)
யாழ்ப்பாணம்.

தமிழ், ஆங்கில தட்டெழுத்து, சுருக்கெழுத்து வகுப்புகளும், ஆங்கில இலக்கணமும், ஆங்கில பேச்சு வகுப்புகளும் நடைபெறுகின்றன.

பாடங்களை எந்நாளிலும் ஆரம்பிக்கலாம். தனிப்பட்ட கவனிப்பு அளிக்கப்படும்.




**நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்:**

(1) இன்று முதல் மார்ச் மாத இறுதிவரை உதயன் - சஞ்சீவ் பத்திரிகைகளில் பிரசுரமாகும் கூப்பன்களில் வடக்கின் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரராக நீங்கள் கருதும் ஆட்டக்காரரின் பெயரை நிரப்பி அவர்களுக்கு உங்கள் வாக்கை அளியுங்கள்.

(2) வாக்குக் கூப்பன்கள் அனைத்தையும் நேரடியாக உதயன் பணிமனைக்கு "கிரிக்கெட் வீரர் தெரிவு, மே/பா. உதயன், தபால் பெட்டி இல. 23, யாழ்ப்பாணம்" என்று விலாசமிட்டு அனுப்பி வையுங்கள் அல்லது - இதற்கென உங்கள் பகுதிகளில் குறிப்பிடப்படும் இடங்களில் வைக்கப்படும் வாக்குப் பெட்டிகளில் உங்கள் கூபன்களை இடலாம்.

**போட்டி விதிகள்:**

(1) நீங்கள் தெரிவு செய்யும் வீரர் 19 வயதுக்கு உட்பட்ட பாடசாலை வீரராக இருக்க வேண்டும்.
(2) உதயன் / சஞ்சீவ் பத்திரிகைகளில் வெளியாகும் கூப்பன்கள் மூலம் அளிக்கப்படும் வாக்குகள் மட்டுமே செல்லுபடியாகும்.
(3) சரியான முறையில் நிரப்பப்படாத கூப்பன்கள் நிராகரிக்கப்படும்.
(4) நீங்கள் தெரிவு செய்யும் வீரரின் முழுப் பெயரையும் கூப்பனில் எழுதுவது வரவேற்கத்தக்கது.
(5) ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் அதுவரை அளிக்கப்பட்ட வாக்குகள் எண்ணப்படும். வாக்கு எண்ணிக்கை விவரம் பிரதி செவ்வாய்க்கிழமை தோறும் உதயனில் பிரசுரமாகும்.
ஒவ்வொரு வாரமும் முன்னணியில் இருக்கும் வீரருக்கு அந்த வாரத்தில் வாக்களித்த இரு அதிஷ்டசாலிகளுக்கு தலா 50 ரூபா பரிசு வழங்கப்படும்.
(6) போட்டி சம்பந்தப்பட்ட விடயங்களில் போட்டிக் குழுவின் தீர்ப்பே இறுதியானதும் முடிவானதுமாகும்.

✶ வடக்கின் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரராகத் தெரிவு செய்யப்படும் வீரர்களுக்கு பெறுமதிமிக்க பல பரிசுகள் வழங்கப்படும்.

✶ கூப்பன்களை இடுவதற்கான வாக்குப் பெட்டிகள் வைக்கப்படும் இடங்கள் :

1. வை. எம். சி. ஏ. மண்டபம். யாழ்ப்பாணம்.
2. ஷப்ரு நிதி நிறுவனம், யாழ்ப்பாணம்.
3. சிவா ஸ்ரோர்ஸ், கே. கே. எஸ். வீதி (யாழ் இந்துக் கல்லூரிச் சந்தி), யாழ்ப்பாணம்.
4. மைக்குரோ கொம்யூனிக்கேசன், கே, கே, எஸ் வீதி, குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்.
5 துர்க்கா ஸ்ரோர்ஸ், கன்னாகம் சந்தை, சுன்னாகம்.
(ஏனைய இடங்கள் பின்னர் அறிவிக்கப்படும்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 24 - 02 - 1987. தொலைபேசி இல. 24205, 23073.
Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane Power House Road, JAFFNA. Registerd as a Newspaper at the General Post office under QJ/94 / N / 87

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org